**கெஸ்பாவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 25 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெஸ்பாவ நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 யூலை முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய கழிவுப் பொருள் அகற்றுவதற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 9,248,015 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,747,592 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மீதியினை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். |
| (ii) | 2019 ஆம் ஆண்டிற்காக தனியார் நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய கழிவுப் பொருள் வருமானம் ரூபா 1,271,645 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க | சரியான மீதியினை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்க வேண்டிய கழிவுப் பொருள் கட்டணக் கணக்கு சரியாக சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கழிவுப் பொருள் வருமானம் ரூபா 456,828 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iii) | வீதிகளின் குழிகளை மூடுவதற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய பணம் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் கடன்கொடுத்தோராக ரூபா 5,160,179 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் மற்றும் பீனிக்ஸ் செயற்திட்ட செலவினம் அப்பெறுமானத்தினால் அதிகரித்து கணக்கீடு செய்ப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் கடன்கொடுத்தோர் பட்டோலையில் இந்த தொகை தவறுதலாக உள்ளடக்கப்பட்டமையினால் அந்த பதிவினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iv) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பிரதான அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக கிடைக்க வேண்டிய கடனாக ரூபா 160,000,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் 2020 யூன் வரை கடன் கிடைத்திருக்கவில்லை. | கடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு வருடம் ஒன்றிற்குள் கிடைக்காதிருந்தால் மாத்திரம் அட்டுறுவாக காண்பிக்கப்பட வேண்டும். | கடன் விண்ணப்பப்பத்திரம் 2020.07.14 ஆம் திகதி உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## (ஆ) நிகழத்தக்க பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 07 வழக்குகள் மற்றும் சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள 01 வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக சபையினால் மற்றும் சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு அறிக்கைகளை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை அவற்றிற்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 218,887 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டமை மற்றும் ரூபா 705,835 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டமை அவதானிக்கபட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளில் சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தீர்த்து வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய ஆதன கடன் வட்டி மீதியான ரூபா 869,688 தொகை உள்ளுராட்சி திணைக்களத்திலிருந்து (மே.மா) மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதன கடன் வட்டியை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளுராட்சி திணைக்களத்தின் தாமத வழுக்களினால் இந்த தொகை மீளளிப்பு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அந்த தொகையை மீளளிப்பு செய்யுமாறு 2018.06.18 ஆம் திகதி கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீண்டும் 2017 ஆம் ஆண்டிற்கான தொகை 2018.09.03 ஆம் திகதி நிதிப் பிரமாணம் 115 மூலம் அங்கீகாரம் கோரி அனுப்பப்பட்டுள்ளது. |

**செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 133,674,363 தொகையான மாகாண சபை | மாகாண சபை கடன் கொடுத்தோர் மீதியை தீர்த்து | 2020 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது தீர்த்து |

| | | |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் மீதியில் 2014 முதல் 2016 வரையான காலத்திற்குரிய ரூபா 12,962,962 தொகை காணப்பட்டது. | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(உ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 641,883,464 தொகையான 08 கணக்கு விடயங்களுக்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பட்டோலைகள் அல்லது தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பட்டோலைகள் தயாரிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி. | சபைக்குச் சொந்தமான 26 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 09 வாகனங்களுக்குரிய எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 84,546,284 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,226,872 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 89,851 | 90,621 | 85,853 | 55,225 | 72,735 | 87,995 | 98,113 | 44,401 |
| (ii) | வாடகை | 23,422 | 18,050 | 20,854 | 2,950 | 17,462 | 18,802 | 20,672 | 3,373 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,402 | 1,444 | 1,876 | 252,114 | 1,950 | 1,293 | 1,594 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 240,689 | 200,000 | 315,865 | 409,018 | 200,907 | 160,501 | 295,875 | 466,797 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170 வது பிரிவின் பிரகாரம் ஆதன வரி அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி ரூபா 53,875,578 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 50,000 தொகையை விஞ்விய ஆதன வரி அலகுள் 26 இல் இருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 2,263,705 ஆகும். | நிலுவை ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 50,000 மேற்பட்ட 13 ஆதனங்களில் ரூபா 1,551,072 தொகையான நிலுவையை அறவிடுவதற்கு முடியாதிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டமையினால் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவேடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 10 ஆதனங்களுக்காக காணப்பட்ட நிலுவையாக ரூபா 1,703,396,801 தொகை முழுமையாகவும் பகுதியாகவும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நிலுவை மீதி ரூபா 2,263,705 ஆக இருந்ததுடன் ஆதனங்களின் எண்ணிக்கை 26 ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடல் ரூபா 79,751,940 ஆக இருந்த போதிலும், அதில் ஆண்டின் போது ரூபா 55,576,786 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | சிட்டையிடப்பட்ட ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவையில் ரூபா 9,947,833 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி நிலுவைப் பணம் நாட்டில் காணப்படுகின்ற சிக்கலான நிலைமை சீராகும் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2019 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையான ரூபா 44,401,255 தொகையில் ஆண்டின் போது ரூபா 18,773,673 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய கழிவுப் பொருள் வருமானம் ரூபா 871,279 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பெறவேண்டிய கழிவுப் பொருள் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு மாதமும் முதல் 10 நாட்களில் பணம் செலுத்தாத நிறுவனங்களுக்காக சேவையை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கழிவுப் பொருள் வரி செலுத்தாத நிறுவனங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டு அந்த நிறுவனங்களின் நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிய புதிய வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. |
| (உ) | 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதி விளக்கு உதவி ரூபா 481,578 தொகை மற்றும் 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய பிலியந்தலை விளையாட்டு சங்கத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய மின்சார நுகர்வுக் கட்டணம் ரூபா 18,509 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | வீதி விளக்கு உதவி மீதி மற்றும் பெறவேண்டிய மின்சார கட்டண மீதி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதி விளக்கு உதவி மீதி ரூபா 254,748 தொகையை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இரட்டை கணிப்பீடு ஏற்பட்டுள்ள ரூபா 226,830 தொகையான தவறான சிட்டையிடல் கணக்கின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. மின்சார கட்டணத்தை செலுத்துவதற்கு விளையாட்டு சங்கம் உடன்பட்டுள்ளது. |
| (ஊ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வசதிகள் நிலையத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 68,790 தொகை மற்றும் 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளுக்காக அறவிட வேண்டிய களியாட்ட வரி | களியாட்ட வரி மற்றும் ஏனைய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 44,865 தொகையை அறவிடுவதற்காக கெஸ்பாவ நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பிரதிவாதியை கண்டறிவதற்கு முடியாதிருந்தமையினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 281,047 என்பவற்றை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | | ரூபா 23,925 தொகையை அறவிட முடியாத பணமாக கருதி பதிவழிப்பதற்கு பொதுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மிகுதி அங்கீகாரத்திற்காகவும், களியாட்ட வரி ரூபா 281,047 தொகையை பதிவழிப்பதற்கு பொதுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்திற்காகவும் அனுப்பப்பட்டுள்ளது. |
| (எ) | வாகனங்களை நிறுத்தி வைத்தல் வாடகையாக அறவிட வேண்டிய ரூபா 291,622 தொகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | வாடகைப் பணத்தை ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழக்கு விசாரணையில் உள்ளது. செலுத்தப்பட்ட ரூபா 17,000 தொகையான நிலுவைப் பணம் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னுள்ள நிலுவையில் அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.3 வாடகை**

**(அ) நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்படுகின்ற ஆதனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 2,493,440 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டில் ரூபா 1,155,450 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியருந்ததுடன் பெறவேண்டிய வருமானத்தை ஆண்டின் போது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 1,039,665 பழைய மீன் கடை நிலுவைப் பணம் தற்போது பதிவழிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்தள்ளது. அதன் பிரகாரம் நிலுவை பணம் ரூபா 298,325 ஆகும். 2020.06.30 ஆம் திகதி வரையில் அதில் ரூபா 60,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் நிலுவை மீதி ரூபா 237,825 ஆகும். |
| (ii) | சபைக்கு சொந்தமான நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட 135 ஆதனங்களில் இருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 2,354,045 ஆக இருந்த | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் ஆண்டின் வருமானத்தை உரிய காலத்தில் பெற்றுக் கொள்வதற்கும் | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| போதிலும், அந்த மீதியில் 10 தவணைகளுக்கு மேற்பட்ட 07 ஆதனங்களின் நிலுவை மீதி ரூபா 294,650 ஆகும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**(ஆ) வருடாந்தம் கேள்வி அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற ஆதனங்கள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதன வரி நிலுவை மீதி ரூபா 308,622 ஆக இருந்த போதிலும், அதில் ஆண்டில் ரூபா 17,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | வருடாந்த கேள்வியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற ஆதனங்களின் வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். | வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பிரதி வாதி மரணமடைந்திருந்தமையினால் பதிவழிப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | கேள்வியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் நிலுவை மீதி ரூபா 522,073 தொகை மற்றும் பொது மலசல கூடம் மற்றும் காலை சந்தையின் நிலுவை மீதி ரூபா 64,366 ஆக இருந்த போதிலும், அதில் ஆண்டின் போது எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்தம் கேள்வி அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன தரிப்பிடத்திற்குரிய நிலுவை ரூபா 521,079 ஆக இருந்ததுடன் பொது மலசல கூடம் மற்றும் காலை சந்தைகளின் நிலுவை ரூபா 78,630 தொகையில் ரூபா 9,840 நிலுவைத் தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், பொது வசதிகளுக்கான நிலையமொன்றிலிருந்து பணம் அறவிடப்படவில்லை. அதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதன வரி செலுத்துகின்ற வியாபார | வியாபார அனுமதிப் பத்திரம் அல்லது வியாபார வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | 2011 இன் மதிப்பீட்டு திருத்தத்தின் போது வியாபார நிலையங்கள் (வணிகம்) ஆதனமாக 7986 பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நிலையங்களின் எண்ணிக்கை 7986 ஆக இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டிற்காக வியாபார நிலையங்கள் 4061 இல் இருந்து வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | வேண்டும். மெய்மெய்யாய்வில் பிரதேசத்தில் உள்ள உள்ளபடியான வியாபார நிலையங்களின் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | மதிப்பீடு செய்வதற்காக 03 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்ததால் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் நகர சபையின் உத்தியோக்கத்தர்கள் ஒன்றிணைந்து மொத்த அதிகார பிரதேசத்திலும் அமைந்துள்ள ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரியினை அறவிடும் போது வரையறுக்கப்பட்ட காலத்தில் அதிகார பிரதேசத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், சில உப வீதிகளில் வீட்டுடன் நடாத்திச் செல்லப்பட்ட வியாபாரங்கள் கைவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வியாபார அனுமதிப் பத்திரங்களின் பெறுமதி ரூபா 252,114 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 244,114 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வியாபார அனுமதிப் பத்திரத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 44,210 தொகையான அனுமதிப் பத்திர கட்டணத் தொகை 2020.06.11 ஆம் திகதி பொதுச் சபையின் 5:6 முன்மொழிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டு பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>2016, 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 15,000 தொகையான மீதிக்காக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br>2015, 2014, 2013 மற்றும் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னுள்ள மீதி ரூபா 187,615 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்த மீதியாக கருதி பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருமான கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 295,018,225 தொகையான நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 95,018,225 நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 114,000,000 தொகை பெறப்பட்டிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 95,018,225 தொகை எதிர் வரும் நாட்களில் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பிப்பதற்கு முன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு முறையான பிரகாரம் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன், ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் எடுக்கப்படுகின்ற கால எல்லை மற்றும் செயலாற்றல் என்பவற்றை தெளிவாக இனங்காண்பதற்கு போதியளவான தகவல்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தெளிவாக செயற்பாடுகள் மற்றும் எடுக்கப்படுகின்ற காலங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டு உரிய ஆண்டிற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது மேற்கூறப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 3,193,521 பெறுமதியான 06 செயற்திட்டங்கள் 2020 யூன் 19 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் உரிய உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டும். | 03 செயற்திட்டங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மிகுதி செயற்திட்டங்களின் வேலை நடை பெற்றுக் கொண்டிருப்பதுடன் தாமதத்திற்காக கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. |

### (இ) ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்பெரலிய மற்றும் சூகித பூறவற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 45 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 34,275,007 தொகையொன்று பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்தது. | உரிய பணத்தை தாமதமின்றி பெற்று செலுத்துவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலகத்திலிருந்து 26 கம்பெரலிய செயற்திட்டங்கள் மற்றும் 19 சூகித புறவற செயற்திட்டங்களுக்காக பணம் கிடைக்கப்பெறாதிருந்ததுடன், அந்த பணம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. |

### (ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டிற்குரியதாக ஒதுக்கப்பட்ட கழிவுப் பொருட்களுக்காக ரூபா 2,121,800 தொகை மற்றும் வேறுபிரிக்கப்படாத கழிவுப் பொருட்களுக்காக ரூபா 14,236,000 என்பன சபையினால் செலவிடப்பட்டிருந்தது. கழிவுப் பொருள் முகாமைத்துவம் நலிவான நிலைமையில் | கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் உரிய கால எல்லையில் அமுல்படுத்தப்பட வேண்டும். | நகர சபையின் மூலம் நடாத்தப்படுகின்ற விஷேட சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள், விஷேட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் அலுவலகத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற லட்ட லொட்ட நிகழ்ச்சித் திட்டம் போன்றவற்றின் மூலம் கழிப் பொருட்கள் சேகரித்தமையினால் கலப்பு |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் கழிவுப் பொருட்கள் வேறு பிரிக்கப்படாமையின் காரணமாக ரூபா 11,388,800 தொகையை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | கழிவுப் பொருள் அதிகரித்தமைக்கு காரணமாக இருந்தது. மேலும், மக்களுக்கு எவ்வளவு அறிவுறுத்தல்களை வழங்கிய போதிலும் வீதி ஓரங்கள் இரண்டிலும் கழிவுப் பொருட்களை போடுகின்றமையினால் அதனை நாளாந்தம் அகற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் கலப்பு கழிவுப் பொருட்களுக்காக மேலதிகமான பெறுமதியொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ii) | பல உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவுப்பொருட்கள் கொண்டு போடப்படுகின்ற கரதியான கழிவுப் பொருள் தளம் அமைந்துள்ள காணியில் 80 சதவீதமான அளவு கெஸ்பாவ நகர சபை அதிகார பிரதேசத்திற்கு உரியதாக இருந்ததுடன், கழிவுப் பொருள் தளத்தில் இருந்து மூவாயிரம் மீற்றருக்கு அதிகமான தூரத்தில் மிகவும் துர்நாற்றம் வீசுதல், ஈக்கள், நுளம்புகள் பெருகுகின்றமையினால் அதிகார பிரதேசத்தில் மக்கள் அதிக பிரச்சினைகளுக்கு உட்பட்டமை, அந்த நிலைமையில் இருந்து மக்களின் வாழ்க்கைக்கு பாரியளவான அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தமை, கழிவுப் பொருள் தளத்தில் இருந்து வழிந்தோடிச் செல்கின்ற நீரின் காரணமாக பிரதேசத்தின் இயற்கையான நீர் வளம் பாதிப்படைந்திருந்தமை போன்ற காரணங்களினால் பிரதேச மக்களுக்கு பாதகமான சுகாதார | பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு அறிவித்து தீர்வு காணப்பட வேண்டும். | கரதியான கழிவுப் பொருள் தளம் அமைந்துள்ள காணி கெஸ்பாவ நகர சபை அதிகார சபை பிரதேசத்திற்கு உரியதாக இருந்த போதிலும், இதன் கட்டுப்பாட்டு அதிகாரம் மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்குரியதாகும். காணப்படுகின்ற அபாயகரமான நிலைமை தொடர்பாக அதிமேதகு சனாதிபதி, கௌரவ பிரதமர் உள்ளடங்கிய பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

பிரச்சினைகள் மற்றும் அபாய நிலைமை ஏற்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான போக்குந்தர அரசாங்கத்தின் விடுதிகளில் வாடகை அடிப்படையில் நீண்ட காலமாக குடியிருந்து வருகின்ற 17 குடியிருப்பாளர்களுக்கு காணி உரித்துறுதி வழங்குதல் தொடர்பான முன்மொழிவு 2010 பெப்ரவரி 23 ஆம் திகதி பொதுச் சபையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், காணியினை பகிர்ந்தளித்தல் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து உரித்துறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிரச்சினைகளைத் தீர்த்து உரித்துறுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீட்டு வாடகை செலுத்துதல் முழுமையாக புறக்கணித்திருந்தமையினால் உள்ளூராட்சி வாடகை வீட்டு கொள்கையின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது. அதனால் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36(உ) பிரிவின் பிரகாரம் நகர சபை ஆதனங்களை அகற்றுவதன் கீழ் நடவடிக்கை எடுப்பதற்காக திட்ட இலக்கம் 5337 இன் 17 நிலக்கூறுகள் மதிப்பீட்டு திணைக்களத்தை வரவழைத்து மதிப்பீடு செய்து அந்த குடியிருப்பாளர்களுக்கு அந்த ஆதனங்களை அகற்றுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற நிர்மாண நிறுவனத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 164,203 தொகையான முற்பணத்தை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முற்பணத்தை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை தீர்மானித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணம் ரூபா 1,870,831 செலுத்தப்படாமையினால் ரூபா 935,413 தொகையான மிகை | நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2008 முதல் 2012 வரையான காலப்பகுதியில் கடமைகளை நிறைவேற்றிய உத்தியோகத்தரிடம் |

| | | |
|---|---|---|
| கட்டணம் உள்ளடங்கலாக 2017 யூலை முதல் 2019 திசெம்பர் 31 வரை சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 2,806,243 தொகையை அதற்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | இருந்து இது தொடர்பான அவதானிப்புக்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

(அ) **ஊழியர் வெற்றிடம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 02 பதவி நிலை தரப் பதவிகளை உள்ளடக்கிய 17 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) | சபையின் செயற்திட்டத்திற்காக சேர்க்கப்பட்டிருந்த 71 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 15,246,946 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் பதவியணியினர் மீளாய்வு செய்யப்பட்டு பதவிகள் 2013 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து எதிர் காலத்தில் நகர சபையின் தேவைகளுக்காக சில செயற்திட்டங்கள் உள்ளூராட்சி ஆணையாளரின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியர்களின் தேவை நிதிப் பிரமாணம் 71 இன் கீழ் பதவிகளை தோற்றிவிப்பதற்கு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கோரிக்கையிடப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) **ஊழியர் கடன்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அறவிட வேண்டிய ஊழியர் கடனில் 11 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2011 ஆம் ஆண்டு முதல் 2016 வரை அறவிட வேண்டிய ரூபா 307,226 தொகையான கடன் மீதியில் மீளாய்வாண்டின் போது எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன்காரர்கள் கடனை செலுத்தாது விடுகின்ற சந்தர்ப்பத்தில் பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு உத்தியோகத்தர்கள் செலுத்துவதற்கு இணங்கியிருந்தனர். இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,250 மற்றும் ரூபா 6,963 தொகை செலுத்தப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதி சேவையிலிருந்து விலக்கிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 233,523 தொகையான இடர் கடன் மீதி மற்றும் 2018 ஆம் ஆண்டில் ஊழியர் சேவையை விட்டு விலகிச்சென்ற ஊழியரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 82,178 தொகையான கடன் மீதி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (iii) | மரணமடைந்த, சேவையை விட்டு விலகிய மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 206,895 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிமைக்காரர்களிடம் இருந்து பகுதியாகவேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இந்த கடன் பணத்தை அறவிடுவதற்குள்ள தேவை தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அறிக்கை இட்டு கடன் மீதியை அகற்றுவதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு கோரப்பட்டுள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 14 மயான நிலங்களில் 13 இன் உரித்தை (உரிமம்) கையேற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மிகவும் மந்த நிலையில் காணப்பட்டது. | மயான நிலங்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். | மயான நிலங்களை கெஸ்பாவ நகர சபைக்கு கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இது வரையில் 05 மயான நிலங்கள் (திகன, கஹபொல, விஸ்வகலாவ, கெஸ்பாவ மற்றும் ஹெடிகம)) அளவிடல் கட்டளை கிடைத்து அளவிடல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர் காலத்தில் மயான நிலங்களின் உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 1676.75 பேர்ச் பரப்பளவான 34 காணிக் கூறுகள் தற்போதைய முகவரி அல்லது தற்போது பயன்பாடு தொடர்பாக உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் 1898.83 பேர்ச் அளவான பாரியளவான 22 காணிக் கூறுகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படாது வெற்றுக் காணியாக காணப்பட்டது. | எதிர் கால அபிவிருத்திக்காக சபையின் காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும். | 1986.03.10 ஆம் திகதி 392/9 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கட்டளையின் 22(1)(2) மற்றும் 23 ஆம் பிரிவுகளில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 74 காணிகளில் 56 காணிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைளுக்காக ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன், காணிகளில் அனுமதியற்ற பிடித்தல்களுக்கு உட்பட்டிருந்தது. | அனுமதிற்ற வகையில் பிடித்து வைப்பதை தடுப்பதற்காக சபைக்குச் சொந்தமான காணிகள் பௌதீக ரீதியில் இனங்காணப்பட வேண்டியிருந்தது டன், எதிர் கால அபிவிருத்திற்காக சபையின் காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும். | இவ்வாறு வெற்று காணிகள் தொடர்பாக அளவிடை நடவடிக்கைகளைச் செய்வதற்கு பாரியளவான பணமொன்று செலவாகின்றமையினா ல் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் உரிய காணிகள் தொடர்பாக களப் பரிசோதனை மேற்கொண்டு எதிர் காலத்தில் சமூக சபை பங்குபற்றலுடன் உரிய செயற் திட்டமொன்று தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.3 வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் களஞ்சியத்தில் GI குழாய்கள் 236, சபை மண்டபத்தின் 02 கதிரைகள் மற்றும் ஒரு அலுமாரி என்பன பற்றாக்குறையாக காணப்பட்டது. | காசாகவோ அல்லது பொருள்களின் மூலமோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | GI குழாய்கள் 236 தொடர்பாக பரீட்சிப்பதற்கு நியமிக்கப்பட்ட பரிசோதனைச் சபையினால் அறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் , அது 2020.07.09 ஆம் திகதி பொதுச் சபையில் மேலும் பரீட்சிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 02 கதிரைகள் மற்றும் அலுமாரி தொடர்பான பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |